2 அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

ஆ. மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்—தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றைமாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழுவில் (Estimates Committee) திரு. வால்மீகி அவர்களின் மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 28—1—1981 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும் வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 29—1—1981 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—1—1981 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின், 31—1—1981 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும் பகல் 12.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின்கீழ், வேளாண்மைத் துறையின் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாளிட்ட அரசாணை எண் 1638-ன்படி திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு—

(1) திரு. செ. இராமலிங்கம்.

(2) திரு. ஆர். சி. சுப்பிரமணியம்.